அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 01/2020

எனது இல : MPA/SSD/01/SSMIN/01
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.01.14

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில், 2137/89 ஆம் இலக்க 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி உள்ளடங்கிய திருத்தங்களை நடைமுறைப்படுத்தல்</u>**

இலங்கை விஞ்ஞான சேவையின் மூன்றாம் (III) ஆம் தரத்திலிருந்து இரண்டாம் (II) ஆம் தரத்திற்கும் இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்திற்கும் தரமுயர்வு வழங்குவதற்கான ஆகக் குறைந்த சேவைக் காலத்தை திருத்துவதற்கான ஏற்பாடுகள் உள்ளடங்கிய 2019.08.23 ஆம் திகதிய 2137/89 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் நான்காவது சேவைப் பிரமாணக் குறிப்புத் திருத்திற்கு இணங்க தற்போது சேவையிலுள்ள இலங்கை விஞ்ஞான சேவை உத்தியோகத்தர்களுக்கான தரமுயர்வுகள் பின்வரும் விதத்தில் மேற்கொள்ளப்படும்.

**1.** மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்திற்கு தரமுயர்த்துதல்

1.1) 2019.02.26 ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள் உத்தியோகத்தர்கள் இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதி அல்லது 2019.02.26 ஆம் திகதிய ஆகிய இரண்டில் பிந்திய தினத்திலிருந்து தரம் II இற்கு தரமுயர்த்தப்படுவர்.

1.2) இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் தொடர் இலக்கம் (vi) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை 01/2014 ஆம் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலப் பகுமதியில் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் உரிய தினத்தில் மற்றைய அரசகரும மொழித் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதவர்களாகக் கருதப்படுவர்.

1.3) இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் தொடர் இலக்கம் (vi) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை 01/2014 ஆம் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் இடைநேர் விளைவான

சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலப் பகுமதியில் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களுக்கு அச்சுற்றறிக்கையிலும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

**2.** இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்திற்கு தரமுயர்த்துதல்

2.1) சேவைப் பிரமாணக் குறிப்பிற்கான நான்காவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019.02.26 ஆம் திகதிக்கு முன்னர் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் III ஆம் தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் விடயத்தில் பின்வரும் விடயங்கள் ஏற்புடையதாக்கப்படும்.

(அ II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெறுவதற்குப் பெற்றிருக்க வேண்டிய 10.2.1.1 இன் தொடர் இலக்கம் (v) இன் கீழ் பின்வரும் பட்டப்பின் பாடநெறித் தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்காக II ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்று ஏழு (07) வருட சேவைக் காலம் பூர்த்தியாகும் திகதி அல்லது 2025.01.14 திகதி ஆகிய இரண்டில் முதலில் எழும் திகதி வரை சலுகைக் காலப் பகுதியொன்று வழங்கப்படுவதுடன் அச்சலுகைக் காலப் பகுதியில் உரிய தகைமையைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க 10.2.1.1 இற்கு இணங்க பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்கு தரமுயர்த்தப்படுவர்.

(ஆ) II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெறுவதற்குப் பெற்றிருக்க வேண்டிய 100.2.1.1 இன் தொடர் இலக்கம் (iv) இன் கீழான இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்வதற்கு II ஆம் தரத்திற்கு தரமுயர்த்ப்பட்ட தினத்திலிருந்து மூன்று (03) வருட சலுகைக் காலம் வழங்கப்படுவதுடன் அச்சலுகைக் காலப் பகுதியில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க 10.2.1.1 இன் கீழ் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய தகைமைகளைப் பூர்த்தி செய்த தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்படுவர்.

2.2) சேவைப் பிரமாணக் குறிப்பிற்கான நான்காவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019.02.26 திகதிக்கு முன்னர் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களை I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தும் போது 10.2.1.1 இன் (i) மற்றும் (iii) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) II ஆம் தரத்தில் இரண்டு (02) வருட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் II ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்றதன் பின்னர் இரண்டு (02) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

(ஆ) அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகைத் தரங்கணிப்புச் செயலொழுங்கிற்கு இணங்க ii ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்றதன் பின்னர் தரமுயர்த்தப்படும் திகதிக்கு முன்னரான

இரண்டு (02) வருட காலத்தில் திருப்திகரமான அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்திருத்தல்.

குறிப்பு :

இத்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் திகதியிலில் ஒரு உத்தியோகத்தர் II ஆம் தரத்தில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை தரமுயர்வு வழங்கும் நோக்கத்திற்காக I ஆம் தரத்தின் சேவைக் காலம் கருதப்படும்.

2.3) சேவைப் பிரமாணக் குறிப்பின் நான்காவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019.02.26 ஆம் திகதிக்கு முன்னர் III ஆம் தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இச்சுற்றறிக்கையின் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க II ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்படும் உத்தியோகத்தர்களை I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தும் போது 10.2.1 இன் (i) மற்றும் (iii) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) III மற்றும் II ஆம் தரங்களில பன்னிரண்டு (12) வருட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் பதினொரு (11) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும்.

(ஆ) அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகைத் தரங்கணிப்புச் செயலொழுங்கிற்கு இணங்க தரமுயர்த்தப்படும் திகதிக்கு முன்னரான பன்னிரண்டு (12) வருட காலத்தில் திருப்திகரமான அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்திருத்தல்

இச்சுற்றறிக்கை அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. எஸ். ஹெட்டியாரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு